TNTP010051982025

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**
**<u>திருச்சிராப்பள்ளி</u>**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 28–ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.286/2025</u>**
**<u>CNR.No. TNTP01–005198–2025</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>உறையூர் காவல் நிலைய<br>குற்ற எண்.60/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | | விக்கி (எ) விக்னேஷ் த/பெ சப்பாணி, வயது 20/2025,<br>நம்பர் 96, சப்பாணி கோவில் தெரு,<br>வாமடம், தென்னூர்,<br>திருச்சிராப்பள்ளி. |
| சம்பவ நாள் | | 10.02.2025 |
| புகார் நாள் | | 10.02.2026 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 11.02.2026 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 109(1), 118(2) BNS Act கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | **முடிவாக,** அரசு தரப்பானது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 109(1), 118(2) BNS Act கீழ் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து எதிரி குற்றவாளி இல்லை என |

| | | |
|---|---|---|
| | | BNSS பிரிவு 258(1)ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். எதிரி பிணைப்பத்திரம் எழுதி கொடுத்து இருந்தால் அதை ரத்து செய்து உத்தரவிடுகிறேன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 28.07.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.S.எழிலரசி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4, திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.139/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

<u>1. இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>

அரசு தரப்பு வழக்கானது, இவ்வழக்கின் புகார்தாரர் சாய்செந்தில் ஆவார். கடந்த 2024–ம் வருடம் எதிரி விக்கி (எ) விக்னேஷின் நண்பரான அஸ்வின் என்பவருக்கு புகார்தாரரின் நண்பர் முருகா என்பவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையை பஞ்சாயத்து செய்ய புகார்தாரர் சாய்செந்தில் சென்று அஸ்வினை

தாக்கியது தொடர்பாக திருச்சி தில்லைநகர் காவல் நிலைய குற்ற எண்.505/2024–ன் கீழ் வழக்கு பதிவாகியும் அதில் புகார்தாரர் சாய்செந்தில் தலைமறைவாகி முன்ஜாமீன் பெற்ற நிலையில் அது முதல் எதிரியானவர் புகார்தாரர் மீது விரோதம் கொண்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 10.02.2025 அன்று மாலை 05.00 மணி அளவில் சாட்சி அர்பான் தனக்கும் இளஞ்சிறாருக்கும் பிரச்சனை என்று கூறி புகார்தாரரை அழைக்கவே திருச்சி ராக்போர்ட் பஸ் டெப்போ எதிரில் உள்ள சேட்டான் டீ கடைக்கு புகார்தாரர் சாய்செந்தில் சென்றும் அங்கு சாட்சி அர்பனிடம் பிரச்சனை செய்த எதிரி விக்கி (எ) விக்னேஷ் மற்றும் இளஞ்சிறார் ஆகியோர்களை பார்த்ததும் சாட்சி அர்பனிடம் எந்த பிரச்சனை பற்றியும் இவங்ககிட்ட இந்த இடத்துல பேச வேண்டாம் என்று கூறி புகார்தாரர் சாய்செந்தில் சாட்சி அர்பனை அங்கிருந்து அழைத்து சென்றுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக 10.02.2026–ம் தேதி மாலை 06.30 மணிக்கு எதிரி விக்கி (எ) விக்னேஷ் மற்றும் இளஞ்சிறாருடன் ஸ்ரீராம் மாவு மில் அருகே சென்றபொழுது அப்போது புகார்தாரர் சாய்செந்தில் எந்த பிரச்சனையாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம் என்று கூறிய நிலையில் எதிரி விக்கி (எ) விக்னேஷ் புகார்தாரர் சாய்செந்திலை தாக்கி கொலை செய்யும் பொது எண்ணத்தில் செயல்பட்டு இளஞ்சிறார் புகார்தாரர் சாய்செந்திலை பிடித்து கொண்டு "இந்த தேவுடியா புண்டமவன போட்டு தள்ளுடா" என்று எதிரியிடம் கூறவே எதிரி விக்கி (எ) விக்னேஷ் கொலை செய்யும் நோக்கில் தான் மறைத்து வைத்திருந்த அரிவாள் போன்ற வெட்டு கத்தியை எடுத்து "நீ என்ன ரவுடி புண்டையா பஞ்சாயத்து பேச வந்துட்ட" என்று பொது இடத்தில் ஆபாசமாக திட்டியும்,

மேற்கண்ட சம்பவத்தின் பொழுது எதிரி விக்கி (எ) விக்னேஷ் புகார்தாரர் சாய்செந்திலை தாக்கி கொலை செய்யும் பொது எண்ணத்தில் செயல்பட்டு இளஞ்சிறார் புகார்தாரர் சாய்செந்திலை பிடித்து கொண்டு "இந்த தேவுடியா புண்டமவன போட்டு தள்ளுடா" என்று எதிரியிடம் கூறவே எதிரி விக்கி

(எ) விக்னேஷ் கொலை செய்யும் நோக்கில் தான் மறைத்து வைத்திருந்த அரிவாள் போன்ற வெட்டு கத்தியை எடுத்து புகார்தாரர் சாய்செந்திலை பார்த்து "இத்தோடு செத்து போடா" என்று கூறி புகார்தாரர் சாய்செந்திலின் இடது பக்க தலையில் பின் தலை வரை பலமாக வெட்டியும், அதனை தடுத்தபோது புகார்தாரர் சாய்செந்திலின் வலது முன் கையில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை செய்ய முயன்றும்,

மேற்கண்ட சம்பவத்தின் பொழுது எதிரி விக்கி (எ) விக்னேஷ் ஆபத்தான ஆயுதமான அரிவாள் போன்ற வெட்டு கத்தியை பயன்படுத்தி புகார்தாரர் சாய்செந்திலின் இடது பக்க தலையில் பின் தலை வரை பலமாக வெட்டியும், அதனை தடுத்தபோது புகார்தாரர் சாய்செந்திலின் வலது முன் கையில் வெட்டி கொடுங்காயத்தை விளைவித்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 296(b), 109(1), 118(2) BNS Act–ன் கீழ் காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.139/2025 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது 296(b), 109(1), 118(2) BNS Act–ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.286/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் BNSS பிரிவு 249 ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த

வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250உ/இ பிரிவு 251ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 109(1), 118(2) BNS Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:**

6.1) அ.சா.1 சாய்செந்தில் தனது சாட்சியத்தில் நான் திருச்சி உய்யங்கொண்டான் ரெட்டை வாய்க்கால் பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா ரவிச்சந்திரன் திருச்சி கருவூலத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனது அம்மா அரசு பள்ளி ஆசிரியர். கடந்த வருடம் எஸ்.ஆர்.எம் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தேன். கடந்த 11.02.2025–ம் தேதி தில்லை நகரில் உள்ள 80 அடி ரோட்டில் எனது நண்பர்கள் அர்பன் மற்றும் ராஜன் ஆகியோர்களை நான் பார்க்க சென்றேன்.

பரத் கார்த்திக் என்பவருக்கும் ராஜன் என்பவருக்கும் சண்டை நடந்தது. அதை நான் தடுக்க சென்றேன். இருட்டுற நேரம் என்பதால் என்னை அடித்தவர் தற்பொழுது ஞாபகம் இல்லை. எதை வைத்து அடித்தார்கள் என ஞாபகம் இல்லை. மாருதி ஆஸ்பத்திரியில் என்னை அனுமதித்த போது என்னிடம் போலீசார்

கைரேகை மட்டும் பெற்று கொண்டார்கள். புகாரில் உள்ள கைரேகை மட்டும் **அ.த.சா.ஆ.1** ஆகும் என அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சி அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 ரவிச்சந்திரன் தனது சாட்சியத்தில் நான் திருச்சி உய்யங்கொண்டான் திருமலை பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் திருச்சி மாவட்ட கருவூலத்தில் பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 எனது மகன். அவரது நண்பர்கள் பற்றி எனக்கு தெரியாது. 10.02.2025–ம் தேதி அன்று மாலை 07.00 மணியளவில் போன் மூலம் எனக்கு தகவல் வந்தது. அந்த தகவல் எனது மகன் சாய்செந்தில் என்பவர் மாருதி மருத்துவமனையில் இருப்பதாக சொல்லி வந்த தகவலின் பேரில் நான் மாருதி மருத்துவமனைக்கு சென்றேன்.

என் மகனை பார்த்தபோது தலையில் கட்டு போட்டு இருந்தது. அங்கிருந்த மருத்துவரிடம் நான் கேட்ட போது பிருத்விராஜன் என்பவர் தான் எனது மகனை மருத்துவமனையில் சேர்த்ததாக சொன்னார்கள். நான் அடுத்த நாள் காலையில் என் மகன் சாய்செந்திலிடம் கேட்ட பொழுது எங்கள் நண்பர் மூவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது, அதை நான் சென்று கேட்டேன், அப்பொழுது மாலை 06.00 மணி இருக்கும், 4, 5 நபர்கள் வந்தார்கள், என் தலையில் வெட்டிவிட்டார்கள் என்று எனது மகன் என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 பிரஜித்ராஜன் தனது சாட்சியத்தில் நான் திருச்சி வயலூர் ரோட்டிற்கு அருகில் உள்ள பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சாய்செந்தில், அர்பான் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 10.02.2025–ம் தேதி நான், அர்பான், சாய்செந்தில் ஆகியோர் கால் பந்து விளையாடிவிட்டு தில்லை நகரில் உள்ள 80 அடி ரோட்டிற்கு வந்தோம். சாய்செந்தில் எனக்கு முன்பாக சென்றார். நானும், அக்பரும் பின்னால் சென்றோம்.

சாய்செந்திலை கத்தியால் வெட்டி விட்டார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சாய்செந்திலை பார்த்த பொழுது தலையிலும், கையிலும் வெட்டு

காயம் இருந்தது. அவரை மருத்துவமனையில் நான் தான் கொண்டு போய் சேர்த்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 அர்பான் தனது சாட்சியத்தில் நான் திருச்சி உறையூரில் உள்ள கார்மென்ட்ஸ் கார்டனில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சாய்செந்தில், பிரஜீத்ராஜன் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 10.02.2025 அன்று நாங்கள் எல்லோரும் கால் பந்து விளையாட தில்லைநகரில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு சென்றோம். விளையாடிவிட்டு திருச்சி தில்லை நகரில் உள்ள 80 அடி ரோட்டிற்கு நாங்கள் எல்லோரும் வந்தோம்.

அங்கு நான், சாய்செந்தில், பிரஜீத்ராஜன் எல்லோரும் நின்று பேசிக் கொண்டு இருந்தோம். அப்பொழுது சாய்செந்திலை ஒருவர் அருவாளால் இடது கை மற்றும் தலையில் வெட்டினார். வெட்டியவரை சரியாக ஞாபகம் இல்லை. காயம்பட்ட சாய்செந்திலை பிரஜீத்ராஜனும், நானும் மாருதி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) அ.சா.5 முதல் அ.சா.6 தங்களது சாட்சியத்தில் போலீசார் கையெழுத்து மட்டும் கேட்டார்கள். வேறு ஒன்றும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6.6) அ.சா.7 முதல் அ.சா.9 தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளனர்.

6.7) அ.சா.10 ராமராஜன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தனது சாட்சியத்தில் நான் கடைசியாக சேலம் மாவட்டம், குடிமை பொருள் கண்காணிப்பு மற்றும் தடுப்பு பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து 10.010.2025 முதல் தற்பொழுது வரை பணி இடை நீக்கத்தில் உள்ளேன். கடந்த 10.02.2025–ம் தேதி அன்று திருச்சி

மாநகரம் உறையூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது கிடைக்கப்பெற்ற மருத்துவமனை தகவலின் அடிப்படையில் நிலைய உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் என்பவர் காயம்பட்ட வாதியான சாய்செந்தில் என்பவரின் புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய குற்ற எண்.60/2025, சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 118(1), 109(1) BNS–ன் படி வழக்கு பதிவு செய்தார்.

என் உடன் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து அவருடையது தான். அந்த நேரத்தில் நிலைய பொறுப்பு அதிகாரி நான்தான். அந்த சமயத்தில் நிலைய பணியில் அந்த சார்பு ஆய்வாளர் தான் பணியில் இருந்தார்.

பதிவு செய்த அச்சிட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆகும். மேற்படி உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அன்றைய தினமே 22.00 மணிக்கு விசாரணைக்கு நான் எடுத்து கொண்டேன். திருச்சி மாருதி தனியார் மருத்துவமனை சென்று அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்த வழக்கின் வாதியான சாய்செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு வழக்கின் சம்பவ இடமான காந்திபுரம் 80 அடி ரோடு ஸ்ரீராம் மாவு மில் அருகில் இரவு 23.00 மணிக்கு மின் விளக்கு வெளிச்சத்தில் ஆஜர் சாட்சிகள் திரு.செந்தில்குமார், த/பெ.ஆறுமுகம் நச்சலூர் குளித்தலை மற்றும் மகாமுனி, த/பெ.பொன்னர், அக்ரஹாரம், பேரூர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.த.சா.ஆ.11 ஆகும். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.12 ஆகும்.

சம்பவ இடத்தில் காயம்பட்டவரின் தந்தையான ரவிச்சந்திரன் த/பெ.பஞ்சலிங்கம் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவத்தை கண்ணால் பார்த்த சாட்சிகள் பிரஜித்ராஜன், அர்பான்

மற்றும் சம்பவ இடத்தின் அருகில் உள்ள ஸ்ரீராம் மாவு மில்லில் வேலை செய்யும் செல்வம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் எதிரியை தேடி தில்லைநகர், தென்னூர், தீபா நகர் ஆகிய இடங்களில் தேடியும், தில்லைநகர் சாஸ்திரி ரோடு ரயில்வே ஸ்டேஷன் பின்புறம் நுழைவு வாயில் அருகில் வைத்து 11.02.2025–ம் தேதி 00.20 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்தேன். அவர் தில்லை நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு எதிரி என்பதால் அவரை தெரியும். பின்பு ஆஜர் சாட்சிகள் நரேஷ் மற்றும் முகமது ஆரிப் ஆகியோர் முன்னிலையில் 00.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 01.40 மணிக்கு தென்னூர் வாமடம் ரேஷன் கடை எதிரே வடக்கு தெற்காக செல்லும் மூன்று ரயில் பாதைகளை தாண்டி உள்ள குப்பை கிடங்கு உள்ளே இருந்து எடுத்து ஆஜர் செய்த வெட்டு கத்தி (சுமார் 55 செ.மீ நீளமுள்ளது) கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.13 ஆகும். கத்தி **சா.பொ.1** ஆகும்.

பின்பு எதிரி விக்கி மற்றும் கைப்பற்றப்பட்ட கத்தியுடன் நிலையம் வந்து 02.10 மணிக்கு உறையூர் காவல் நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.14 ஆகும். எதிரி விக்கியின் கை மற்றும் காலில் கன்றிய காயங்கள் இருந்தது பற்றி கேட்ட பொழுது சம்பவத்தின் பொழுது தன்னை அங்கிருந்தவர்கள் குச்சி மற்றும் கல்லால் தாக்கியதாக கூறினார்.

எதிரி விக்கியை கைது செய்யும் போது உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டது. அவரை கைது செய்யும் விவரத்தை அவரது தாயார் செல்வி என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான நரேஷ் மற்றும் முகமது ஆரிப் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் எதிரி

விக்னேஷ் என்பவர் மீது திருச்சி, தில்லை நகர் காவல் நிலையத்தில் ஏற்கனவே எதிரி விக்கியின் நண்பர் கொடுத்த புகாரின் பேரில் உண்மை நிலை புகார்தாரர் சாய்செந்தில் என்பவரை 1–வது எதிரியாக சேர்த்து பதிவு செய்யப்பட்டிருந்த குற்ற எண்.505/2024, இதச பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எனது விசாரணை மூலம் தெரியவந்தது.

பின்பு 11.02.2025 அன்று எதிரி விக்கி மற்றும் வழக்கில் கைப்பற்றப்பட்ட வெட்டு கத்தி படிவம் 91–ன் மூலம் நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.15 ஆகும். பின்பு வழக்கின் மேல் விசாரணையில் 18.02.2025 அன்று வழக்கின் புகார்தாரர் சாய்செந்திலை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் அன்றைய தினமே பெயர் விவரம் தெரியாத அடையாளம் தெரியாத இரண்டு வழக்குக்கு சம்பந்தம் இல்லாத எதிரிகளை நீக்கம் செய்து நீதிமன்றத்தில் அறிக்கையை சமர்ப்பித்தேன்.

பின்பு வழக்கின் புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த திருச்சி மாருதி மருத்துவமனை மருத்துவரை விசாரித்து பெற்ற விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.16 ஆகும். சாய் செந்திலுக்கான காயச்சான்று அ.த.சா.ஆ.17 ஆகும். 19.04.2025 அன்று தில்லை நகர் காவல் நிலைய பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் திலகவதி என்பவரை விசாரணை செய்து தில்லைநகர் காவல் நிலைய குற்ற எண்.505/2024 தொடர்பான விவரங்களை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அவர் அந்த காவல் நிலைய தட்டச்சு பெண் காவலர் என்பதால் வழக்கு பற்றிய விவரம் அவருக்கு தெரியும். அதே தேதியில் உறையூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வெங்கடேஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே மேற்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை 126(2), 296(b), 118(1), 109(1) BNS என்பதில் இருந்து 126(2), 296(b), 118(1), 109(1), 3(5) BNS–ன் கீழ் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன் என்றும், 19.04.2025 அன்று வழக்கின் விசாரணையை முடித்து இந்த எதிரி மீது குற்றபத்திரிக்கை

தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**தீர்வு:–**

இந்த வழக்கில் அரசு தரப்பில் 10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4. அ.சா.5 முதல் அ.சா.9 ஆகிய சாட்சிகள் எதிரிக்கு எதிராக எந்தவித சாட்சியங்களும் அளிக்கவில்லை. இந்த வழக்கில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை யார் தாக்கினார் என்று தெரியாது என்று குறிப்பாக ஆஜர் எதிரி தாக்கினாரா அல்லது இல்லையா என்பது பற்றியும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் அ.சா.ஆ.9 மூலம் நிரூபிக்கப்பட்டாலும் அந்த காயம் வழக்கு எதிரியால் ஏற்படுத்தப்பட்டது என்பது பற்றி எந்தவித நிலையான சாட்சியங்களும் இல்லை.

மேலும் அ.சா.10 புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட கத்தி சா.பொ.1. அதற்கான கைப்பற்றுதல் மகஜர்

தயார் செய்து கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.10ன் சாட்சியத்தை கவனிக்கும் பொழுது இவர் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்கியதை தவிர வேறு எதுவும் புலன் விசாரணையில் கண்டுபிடிக்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்து சா.பொ.1 கத்தியை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

எதிரியால் தான் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கு சம்பவ இடத்தில் இருந்து எந்தவித சிசிடிவி பதிவுகளையும் கைப்பற்றவில்லை. சா.பொ.1 கத்தியை தடய ஆய்வுக்கு உட்படுத்தி அதில் உள்ள கைரேகை பதிவு பற்றி விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை சான்ரூட்டும்படி எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை.

<u>முடிவாக,</u>

அரசு தரப்பானது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 109(1), 118(2) BNS Act கீழ் முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து எதிரி குற்றவாளி இல்லை என BNSS பிரிவு 258(1)ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். எதிரி பிணைப்பத்திரம் எழுதி கொடுத்து இருந்தால் அதை ரத்து செய்து உத்தரவிடுகிறேன்.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம்

செய்யப்பட்டு பின்னர் **2026-ம் வருடம் ஜூலை மாதம் 28**-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 28.07.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சாய்செந்தில் |
| அ.சா.2 | ரவிச்சந்திரன் |
| அ.சா.3 | பிரஜித்ராஜன் |
| அ.சா.4 | அர்பான் |
| அ.சா.5 | செந்தில்குமார் |
| அ.சா.6 | நரேஷ் |
| அ.சா.7 | முகமது ஆரிஸ் |
| அ.சா.8 | சரவணபெருமாள் |
| அ.சா.9 | முரளிதரன் |
| அ.சா.10 | ராமராஜன், காவல் ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | - | புகாரில் உள்ள கைரேகை |
| அ.த.சா.ஆ.2 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3 | - | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | - | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | - | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.6 | | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.த.சா.ஆ.7 | - | படிவம் 91 |
| அ.த.சா.ஆ.8 | - | விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.9 | - | காயச்சான்று |

**<u>சான்று பொருட்கள்</u> :–**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | சுமார் 55 செ.மீ நீளமுள்ள அரிவாள் போன்ற வெட்டுக்கத்தி – 1 (அதில் மரக்கைப்பிடியுடன் கூடிய பாகம் 12 செ.மீ நீளமுள்ளது வெட்டும் பாகம் 43 செ.மீ உள்ளது. இரும்பு கைப்பிடி வளைந்த நிலையில் உள்ளது) |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 28.07.2026